Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 32 | பாலம்: 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2022

# ஒன்ராறியோ மாகாண அரசின் சிம்மாசனப் பிரசங்கமும் வரவு–செலவுத் திட்டமும்

2022 யூன் 2ஆம் திகதி நடைபெற்ற 43ஆவது ஒன்ராறியோ மாகாண சட்டசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தலில் மொத்தமான 124 ஆசனங்களில் 83 ஆசனங்களைப் பெற்றுப் பெரும்பான்மை ஆட்சி அமைக்கும் பழமைவாதக்கட்சி தனது முதலாவது சட்டசபையின் அமர்வை 2022 ஓகஸ்ற் 8ஆம் திகதியில் ஆரம்பித்து வைத்தது.



முதல் அமர்வில் கடந்த சட்டசபையின் காலத்தில் சபாநாயகராக இருந்த பழமைவாதக்கட்சியைச் சேர்ந்த Ted Arnott மீண்டும் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரை இம்முறை சபாநாயகராகத் தெரிவு செய்யப் பிரேரித்திருந்தவர் புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராறியோ மாகாண பழமைவாதக்கட்சி அரசின் கோடைகால அமர்வுகள் 2022 ஓகஸ்ற் 9ஆம் திகதி இராணியின் பிரதிநிதியும், ஒன்ராறியோ மாகாண ஆளுநருமான Elizabeth Dowdeswellஇனுடைய சிம்மாசனப் பிரசங்கத்துடன் ஆரம்பமானது.

அவர் தனது உரையில், "இச்சட்டசபையின் உறுப்பினர்களாகிய நீங்கள் சில விடயங்களில் நம்பிக்கையுடன் ஒருவருக்கொருவர் உடன்படாமல் விவாதிப்பீர்கள். அதுதான் ஆரோக்கியமான ஜனநாயகத்தின் இயல்பு. அவ்வாறாயினும் எமது மாகாணம், எமது நாடு மற்றும் இந்த உலகம் பல்வேறு சவால்களை தற்போது எதிர்கொண்டுள்ளபோது நீங்கள் கட்சி சார்பில் பிரிந்து உங்கள் கொள்கை அடிப்படையில் விவாதிப்பதற்கான தருணம் இதுவல்ல. ஒன்ராறியோ மக்கள், தங்கள் அரசாங்கம் பொதுவான நலனுக்காக எல்லோரும் ஒற்றுமைப்பட்டு உண்மையான தீர்வுகளை வழங்க ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இது எமது நோக்கத்தின் ஒருமைப்பாட்டிற்கான நேரம்.

ஒன்ராறியோவில் மற்றும் கனடா முழுவதும் ஏன் உலகம் முழுவதுமே பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மையைக் காண்கிறோம். இவ்வாறு எமது வரலாற்றில் முன் எப்போதும் இருந்தது இல்லை. கோவிட்-19 வைரஸின் புதிய திரிபுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் சீரற்ற தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. சில நாடுகள் மீண்டும் தம்மைப் பொருளாதாரரீதியில் முடக்கும் நடவடிக்கைகளை எடுக்கின்றன. பண வீக்கம் கடந்த நான்கு தசாப்தங்களில் காணப்படாத அளவிற்கு அதிகரித்துச் சென்றுள்ளது. அது எப்போது இயல்பு நிலைக்குத் திரும்பும் எனப் பொருளாதார நிபுணரிடையே ஒருமித்த கருத்து இல்லை.

பெருந்தொற்று நோய்ப்பரவலால் முதலில் சீர்குலைந்த உலகளாவிய வர்த்தக விநியோகம் இன்னும் இயல்புநிலைக்குத் திரும்பவில்லை. அது ரஷ்யா-உக்ரைன் போரினால் மேலும் பின்னடைந்துள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் மட்டும் 370,000 வேலைகளுக்குப் பணியாட்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். ஒன்ராறியோ மாகாணத்தில் வேலையற்றோர் வீதம் 1989ஆம் ஆண்டிற்குப் பின்னர் தற்போதுதான் மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது.

பெருந்தொற்று நோய்ப் பரவல் காலத்தில் மாகாண மற்றும் மத்திய அரசுகள் முன்னொருபோதும் இல்லாதவாறு செய்த செலவுகள் தற்போது நிதி நிர்வாக முறையில் புதிய சவால்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால் இனிவரும் ஆண்டுகளில் விவேகமான முறையில் எமது பொருளாதார வளர்ச்சியை கைக்கொள்ள வேண்டும். இவை எமது மக்களின் வாழ்க்கையிலும், வணிகத்துறையிலும் உண்மையான மற்றும் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும். பொதுமக்கள் தற்போது மளிகைப் பொருட்கள் மற்றும் எரிசக்திக்கு அதிக பணம் செலவழிக்கின்றனர்.

சிறிய, மத்திய மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள் எல்லாம் அவர்களது வளர்ச்சிக்குத் தேவையான தொழிற்பயிற்சி

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அணுகுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR COTTAGE NEEDS
SIVAGE SIVAGUMARAN
BROKER
416-553-8902
sivagehomes@sivage.ca
www.sivage.ca
RE/MAX

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage


FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
TRUTH BUILDS TRUST

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com
HomeLife/Future Realty Inc., Brokerage

DENTAL OFFICE
Dentistry for children, adults and seniors
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
3351 Markham Road, Unit 129 | Markham & Steeles | Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit 5 | Markham & Eglinton | Tel: 416.264.3232
3348 Buroak Avenue | Hwy 7 & Buroak | Tel: 905.471.2818

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
info@rathigahomes.ca
www.rathigahomes.ca
Re/Max Realtron Realty Inc.



MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136

WORK WITH THE BEST TEAM
GET YOUR HOME SOLD!



#1 HOMELIFE TEAM IN ONTARIO

SIVA & JOY

KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS

irealtorteam.com
futuregtahomes.com



SIVA SHANMUGANATHAN Broker
JOY SELVANAYAGAM Broker
SASIKUMAR SHANMUGANATHAN Broker

416.545.7482 416.709.5000

HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905.201.9977



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கூட்டமைப்பிற்குள் கறுப்பு ஆடுகள்?




ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட வேட்பாளர்களில் டலஸ் அழகபெருமவிற்கு தாங்கள் வாக்களிப்பதாக அறிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் ரணில் விக்ரமசிங்கவிற்கு வாக்களித்துள்ளமை தெரிய வந்ததன் பின்னர் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீது தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டடைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே இந்த விடயத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது. ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

சர்வ கட்சி அரசாங்கத்தினை அமைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இதன்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ் மக்களின் நலன் சார்ந்த 10 முக்கிய விடயங்களை நிறைவேற்றுமாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர். இதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற சிறிதரன், ஜனாதிபதி தெரிவின் போது கூட்டமைப்பினர் டலஸ் அழகப் பெருமவிற்கு வாக்களித்திருந்தமையினை சுட்டிக்காட்டியிருந்தார். எனினும், இதனை பொருட்படுத்தாமல் தங்களது கோரிக்கையினை நிறைவேற்றவுள்ளமையினை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார். இதற்கு பதில் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு ஆதரவாக வாக்களித்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

இதன்போது, கூட்டத்தில் பங்கேற்றிருந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதுவும் பேசாது மௌனம் காத்தனர். இதனையடுத்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கடும் விமர்சனங்கள் தமிழ் மக்கள் தரப்பிலிருந்து எழுந்துள்ளன. யார் அந்த 'கறுப்பு ஆடுகள்' என ஊடகங்களும் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டன.

இதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு உள்ளது. தமிழ் மக்களிடம் ஒன்றைக் கூறுவது இன்னொரு பக்கம் வேறு ஒன்றை செய்வது என்பது ஒரு ஏமாற்று நடவடிக்கையாகும். இது தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மீது நம்பிக்கையை இழக்கச் செய்யும்.

ஜனாதிபதி ரணில் கூறியபோது மௌனமாக இருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பு முடிந்தவுடனாவது அதனை மறுத்து கருத்து வெளியிட்டிருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை.

இரண்டு தினங்களின் பின் ஜனாதிபதி ரணில் கூறியதை மறுத்து சுமந்திரன் தனது கருத்தை வெளியிட்டிருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொய் கூறியதாக சுமந்திரன் தனது டுவிட்டர் பதவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொய் பேசுகின்றார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு டலஸ் அழகபெருமவிற்கு வாக்களிப்பதாக எடுத்த தீர்மானம் ஏகமனதானது மட்டுமல்ல, ரணிலுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தை கூட்டத்தில் எந்தக் கட்டத்திலும் ஒருவர் கூட கூறியிருக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டி சுமந்திரன் டுவிட் செய்துள்ளார்.

ஆனால், கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவிற்கு வாக்களித்தமை தொடர்பில் கூட்டமைப்பிற்குள்ளேயே தகவல் கசிந்துள்ளது.

ஜனாதிபதி தெரிவிற்கு முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் டலஸ் அழகபெரும உள்ளிட்ட குழுவினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பை சந்தித்தனர். அப்போது தாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக சஜித் பிரேமதாச உறுதி யளித்ததன் காரணமாக தாங்கள் டலஸ் அழகபெருமவிற்கு வாக்களிக்க முடிவெடுத்ததாகக் கூட்டமைப்பினர் தெரிவித்திருந்தனர்.



ஆனால், டலஸ் அழகபெரும வாக்களிப்பில் வெல்லப்போவதில்லை என்பதும், ரணில் விக்ரமசிங்கவே வெற்றி பெறுவார் என்பதும் சாதாரண பொது மக்களுக்கே தெரியும். கூட்டமைப்பினருக்கு இது தெரியாமலிருக்காது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவிற்கே வாக்களிப்பதாக முன்னரே தீர்மானித்து விட்டனர். எனவே, ரணில் விக்ரமசிங்கவிடம் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து எழுத்து மூலம் அவரிடம் உறுதி பெற்றுவிட்டு வெளிப்படையாகவே ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கலாம். அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்திருக்கலாம்.

கடந்த காலங்களில் நல்லாட்சி அரசாங்கத்தைக் கொண்டு வந்ததில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குப் பெரும் பங்கு உள்ளது. ஒரு கட்டத்தில், பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அவரைக் காப்பாற்றிய 'பெருமை'யும் கூட்டமைப்பினருக்கு உள்ளது.

ஆனால், தமிழ் மக்களின் முக்கியமான எவ்வித கோரிக்கைகளையும் நல்லாட்சி அரசாங்கமோ அதில் பிரதமராகவிருந்த ரணில் விக்ரமசிங்கவோ நடைமுறைப் படுத்தவில்லை. இதனால், ரணில் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை தெளிவாக அவரிடம் தெரிவித்து அவரிடமிருந்து எழுத்து மூலமான உறுதிப்பாட்டைப் பெற்றிருக்கலாம்.

இதனை செய்யாமல் தோல்வியடையும் ஒருவருக்கு வாக்களிப்பதாக அறிவித்து விட்டு, சிலர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் வாக்களித்தமையானது தமிழ் மக்களுக்குப் பெரும் சந்தேகங்கள் ஏற்படக் காரணமாகியுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த காலங்களில் கோடிகளுக்கு விலை போனதாகவெல்லாம் வதந்திகள் வெளியாகின. அவை உண்மையாக இருக்குமோ என்கின்ற சந்தேகமும் இப்போது தமிழ் மக்களுக்கு எழுந்துள்ளது. ஏனெனில், கூட்டமைப்பிற்குள் சில 'கறுப்பு ஆடுகள்' இருக்கின்றமை தெரியவந்ததன் பின்னர் இந்த சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததே.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## காலம்



தூங்கப் போகிறோம்
நீண்ட காலம்!

எழுந்து வா
தூக்கம் துற
துக்கம் மற

பரிகாசம் போதும்
அவகாசம் அதிகம் இல்லை
இதிகாசம் இயற்று!

காலமாவதற்கு முன்பு
காலம் போவதை கவனி!

ஆத்ம சாந்திக்கு
விதை போடு
பாதச் சுவடுகளை
சிற்பங்கள் ஆக்கு!

வெறும் மூச்சு விட்ட
குற்றம் செய்யாமல்
வாழ்ந்து விட்டு போ!

மறுமை உன்னை
பெருமைப் படுத்த
விட்டுக் கொடு!

பிரதிபலன் எதிர்பாரா
பிரதி எடு
மறதி பழகு!

குறையோடு பேசியது போதும்
இறையோடு பேசு!

தூங்கப் போகிறோம்
நீண்ட காலம்!
எழுந்து வா இப்போது!

மு. அ. காதர்
சிங்கப்பூர்

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicccanada.com

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# நாமும் நமது இல்லமும் 613

# மாறுகின்ற வட்டி வீதம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

## Variable Interest Rate

இன்றைய காலத்தில (ஓகஸ்ற் 2022) கனடிய மக்கள் அதிகமாக விரும்பும் அடமானக்கடன் வட்டி வீதம் 'மாறுகின்ற வட்டிவீதம்'. இதற்குக் காரணம் மாறா அல்லது மூடிய (Closed) வட்டி வீதம், மாறுகின்ற வட்டி வீதத்தைவிட அதிகமான தாகும். இருப்பினும், இரண்டுவிதமான மாறுகின்ற வட்டி வீதம் நடைமுறையில் உள்ளது.

கனடியர்கள் ஒரேவிதமான மாறிக் கொண்டிருக்கின்ற வட்டிவீத அடமானம் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

(i) மாறுகின்ற வட்டிவீத அடமானம் (VRM - Variable Rate Mortgage)

(ii) அனுசரிப்பு வட்டிவீத அடமானம் (ARM -Adjustable Rate Mortgage)

மாறிக்கொண்டிருக்கின்ற வட்டிவீத அடமானக் கடன் பெறும்போது, மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். இவை இரண்டிற்கும் உரிய வித்தியாசத்தை நுணுக்கமாக அறிந்திருத்தல் சிறந்தது.

கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை (Canadian Bank Rate) மாற்றும் போதெல்லாம் முதன்மை வட்டிவீதம் (Prime Rate) மாறும். அதிகரிக்கும்போது அதிகரிக்கும். குறைக்கப்படும்போது குறைக்கப்படும்.

### அனுசரிப்பு வட்டிவீத அடமானம்

அதாவது வட்டிவீதம், மத்திய வங்கியின் வட்டி வீதத்திற்கு ஏற்ப மாறுபடும். மாதாந்த அடமானக் கட்டுப்பணம் வட்டி வீதத்திற்கு ஏற்ப ஏறும் அல்லது இறங்கும். ஆனால், கடன்பெற்றுத் திருப்பி செலுத்தும் காலம் (Amortization) மாறாது. இதனால் ARM கடன் பெறுவதால் நன்மைகளும், தீமைகளும் உண்டு. கடன்பெறும் ஆரம்பத்தில் ஒப்பமிட்டுப் பெறப்பட்ட காலத்தில் முழு அடமானக் கடனும் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்.

வட்டி வீதம் அதிகரித்துக் கொண்டு சென்றால் மாதாந்தக் கொடுப்பனவும் அதிகரித்துச் செல்லும். இதனால் மாதாந்தக் கொடுப்பனவு செலுத்துவதில் நெருக்கடி ஏற்படும். அதிக வட்டிவீத அதிகரிப்பால், மாதாந்தக் கொடுப்பனவு செலுத்துவதிலேயே மிகவும் நெருக்கடி ஏற்படும். இதனால் மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்படாமலேயே போகக் கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படும். இது ஒரு துர்ரதிருஷ்டமான நிகழ்வாகலாம். இந்நிலைமையை இன்று அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### மாறுகின்ற வட்டிவீத அடமானம்

கனடிய வட்டி வீதத்திற்கு ஏற்ப மாறுகின்ற வட்டிவீத அடமானமும் மாறும். ஆனால், மாதாந்தக் கட்டுபணம் மாறாது. ஒப்பமிட்டு அடமானக் கடன் பெற்றபோது இருந்த மாதாந்தக் கட்டுப்பணமே தொடர்ந்து இருக்கும் அல்லது காணப்படும். ஆனால், ஆரம்பத்தில் பெற்ற அடமானத்தை திருப்பிச் செலுத்தும் காலம் மாறும். அதாவது வட்டிவீதம் கூடும்போது அல்லது குறையும்போது கடன் திருப்பிச் செலுத்தும் காலம் அதிகரிக்கும் அல்லது குறையும். எனவே மாறுகின்ற வட்டி வீதம் பெறுகின்றபோது இதில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

அண்மைக்காலத்தில் அனுசரிப்பு வட்டிவீத அடமானக்கடன் பெற்றவர்களின் மாதாந்தக் கொடுப்பனவு நெருக்கடியைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே மாறுகின்ற வட்டி வீதம் பெறும்போது இதனைக் கவனத்தில் கொண்டு கையொப்பம் இடவும். அல்லது அனுபவமிக்க நேர்மையான அடமானக் கடன் பெற்றுத்தரும் முகவரை அணுகுதல் சிறந்தது.



இன்றைய காலத்தில் அடமானக்கடன் பெறுவதில் மிகவும் நெருக்கடியுள்ள தனைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் பலர், நேர்மையற்றவர்களை அணுகி அடமானக்கடன் பெறுவதால் பலவிதமான நெருக்கடிக்குள்ளும், அமைதியற்ற வாழ்வில் இருப்பதனையும் காணலாம்.

எதிர்காலத்தை கருத்தில்கொண்டு அல்லது மாதாந்தக் கட்டுப்பணத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக் கூடிய முறையில் அடமானக்கடனைத் தெரிவு செய்வது சிறப்பாகும்.

**JULY 2022 HOUSING MARKET BY REGION**

| | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | **$1,019,100** | **$1,274,911** | **$901,412** | **$1,066,973** | **$1,253,458** |
| Total # New Listings | 4,392 | 2,022 | 1,461 | 2,442 | 1,167 |
| Total # Sales | 1,833 | 820 | 700 | 886 | 510 |
| Avg. Listing Days On Market (LDOM) | 20 | 20 | 15 | 18 | 21 |
| YTD Increase | **13%** | **16%** | **20%** | **19%** | **17%** |
| **HOUSE TYPES & AVERAGE SALE PRICE** | | | | | |
| Detached | $1,515,763 | $1,580,575 | $977,364 | $1,396,762 | $1,552,410 |
| Semi-Detached | $1,268,630 | $1,052,797 | $797,454 | $961,588 | $1,021,938 |
| Townhouse | $1,215,294 | $1,103,535 | $810,196 | $918,449 | $977,036 |
| Condo Apt | $744,092 | $687,843 | $544,124 | $616,876 | $777,255 |

**Prepared By: Sivage Sivagumaran BROKER CPA, CGA, GUILDĀ, ABR, SRES, SRS, RSPS |Source: TRREB Data As of, Aug/04/2022**




---

## புத்திசாலித்தனமாக...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

எல்லாவற்றிற்கும் மேலாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவரது புத்தி சாலித்தனத்தை மட்டும் கையாளாமல் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர் பார்ப்பாகவுள்ளது. வார்த்தைகள், வாக்குறுதிகள் நடைமுறைக்கு வரும் போதே உயிர்பெறுகின்றது.

கடந்த கால தோல்விகளிலிருந்து பாடம் கற்றவராக, மக்களுக்காக நேர்மையுடனும் அரப்பணிப்புடனும் நாட்டை வழிநடத்திச் செல்பவராக ரணில் விக்ரமசிங்க நடந்து கொள்ள வேண்டும் என்பதே நாட்டு மக்களது எதிர்பார்ப்பு.

# புத்திசாலித்தனமாகக் காய்நகர்த்தும் ரணில்!

**- விகிர்தன் -**

ரணில் விக்ரமசிங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாளிலிருந்து மிக அவதானமாக அரசியல் காய் நகர்த்தலை மேற்கொண்டு வருகின்றார். வீழ்ச்சியடைந்த தனது ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் தூக்கி நிறுத்துவது அவரது பிரதான நோக்கம். அடுத்து வரப்போகின்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் களத்திற்கு வரவேண்டும் என்பது அவரது இலக்கு.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து போனவர்களை மீண்டும் உள்வாங்குவதும் அவரது நிகழ்ச்சி நிரலில் அடங்கியுள்ள முக்கிய விடயம். சிறுபான்மை கட்சிகளை வசப்படுத்தவதும் அவரது எண்ணம்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நாட்டை மெல்ல மெல்லவேனும் விடுவித்து நாட்டு மக்களை ஓரளவேனும் திருப்திப்படுத்துவது- ரணில் வராவிட்டால் நாடு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் என்கின்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது- போன்றவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புத்திசாலித்தனமாகக் கையாண்டு வருகின்றார் என்றே கூற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து அவரை நாட்டை விட்டு வெளியேற்றும் நிலை ஏற்படாமலிருந்திருந்தால் ரணில் இன்று ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது. ஆனால், அந்தப் போராட்டக்காரர்களுக்கு எதிராகவே அவர் இன்று நடவடிக்கை எடுத்து வருகின்றார். ஜனநாயக வழியில் போராடியவர்களைத் தான் மதிப்பதாகவும், வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது சட்டம் பாயும் எனவும் அவர் கூறுகின்றார். போராட்டக்காரர்களுடன் இணைந்து நாட்டை வழிநடத்த விரும்புவதாகவும் அவர் தெரிவிக்கின்றார். அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் மனித உரிமைகள் அமைப்புகளிடமும் அவர் இதனையே கூறுகின்றார். எனவே போராட்டக்காரர்களையும் வன்முறையாளர்களையும் பிரித்துப் பார்ப்பதாகக் கூறிக்கொண்டு இனியொரு போராட்டம் ஏற்படாமல் தடுக்கும் வேலைகளையும் அவர் கச்சிதமாகச் செய்து வருகின்றார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அதனால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டமையினையும் தூக்கலாகக் காண்பித்தது சமையல் எரிவாயு தட்டுப்பாடும், எரிபொருள் தட்டுப்பாடுமேயாகும். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற சில நாட்களுக்குள்ளேயே இந்த நெருக்கடி குறைவடையத் தொடங்கியுள்ளது. எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள் இப்போது இல்லை என்றே கூறலாம்.



பொதுமக்கள் வீதிகளில் வரிசைகளில் காத்திருக்கும் நிலைதான் அவர்களைப் போராடும் களத்திற்குத் தள்ளியது. போராட்டத்தை மேற்கொண்ட சக்திகள் மக்களை இணைத்துக்கொள்ள இதனாலேயே முடிந்தது.

கோட்டாபய ராஜபக்ஸவை வெளியேற்றியதும் ரணில் ஜனாதிபதியானதை ஏற்றுக்கொள்ளாத சக்திகள் ரணிலுக்கு எதிராகவும் பெரும் போராட்டத்தை மேற்கொள்ள முனைந்து அது முடியாமல் போனமை இதற்கு நல்ல உதாரணம். கடந்த 9ஆம் திகதி ரணில் விக்ரமசிங்காவிற்கு எதிராக மாபெரும் போராட்டம் ஒன்று நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவ்வாறு எதுவுமே நடைபெறாமல் போனது. மக்கள் அதற்கு அணிதிரளவில்லை. சரியோ தவறோ ரணிலை விட்டால் வேறு வழியில்லை என்று நாட்டு மக்கள் எண்ணக் கூடிய நிலையை ரணில் விக்ரமசிங்கா ஏற்படுத்தி வருகின்றார் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையானது எதிர்க்கட்சியினராலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் குறை தேட முடியாத நிலை எதிர்க் கட்சியினருக்கு ஏற்பட்டுள்ளது. சிலர் வெளிப்படையாகவே பாராட்டுகின்றனர். அவரது கொள்கைப் பிரகடனம் நடைமுறைக்கு வரவேண்டும். அப்போதுதான் அது உண்மையானதாக இருக்கும் என்றும் சிலர் கூறுகின்றனர். எனினும் அந்த உரையை எவரும் நிராகரிக்க முடியவில்லை.

சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் ஏற்கனவே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலையில் சஜித்தை விட்டுப் பலர் ரணிலுடன் இணையலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. ரணிலை கடந்த காலங்களில் கடுமையாக விமர்சித்து, சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் அணிசேர்ந்த சிறுபான்மை கட்சிகளும் ரணிலுடன் இணையத் தயாராகி விட்டன. உதாரணத்திற்கு- நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் சிறந்த நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றது என அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் பல்வேறு விடயங்கள் பாராட்டுக்குரியவை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சிந்தனைகள் அதில் உள்ளடங்கியிருந்தன என்று ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அனைத்து தரப்பினரதும் யோசனைகளைப் பெற்றுத் தருமாறு தமக்கு ஜனாதிபதி ரணில் கடிதம் எழுதியுள்ளதாகவும், நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லும் வகையில் தங்களது யோசனைகளை அவருக்குத் தெரிவிக்க விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். அதன் பின்னர் எதிர்க்கட்சியில் அனைத்து தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கான உரிய செயற்பாடுகளை தாங்கள் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றுமொரு முஸ்லிம் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரசும் ஜனாதிபதியை பாராட்டியுள்ளது. சர்ச்சைக்குரிய 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற செயலணியின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளுக்கு, ஜனாதிபதி உடன் பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவினால் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது. இனவாதப் போக்குள்ள, முஸ்லிம்களை கடுமையாக எதிர்க்கும் ஞானசார தேரரை தலைவராகக் கொண்டு, அவருக்கு விருப்பமான முறையில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தை எந்த வகையிலும் நடைமுறைப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தபோது, அவர் அதற்கு உடன்பட்டார் என ரிசாட் பதியுதீன் தெரிவித்திருக்கின்றார். எதிர்காலத்தில், அனைத்துக் கட்சிகளையும் இணைத்து அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு தமது கட்சி ஒத்துழைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு, நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளதாகவே தங்களது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.


தமிழ் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக எதனையும் தெரிவிக்காத போதிலும் ரணிலுடன் இணங்கிப்போகும் என்றே தெரிகின்றது. இவை ஒருபுறமிருக்க, வெளிநாடுகளிடமிருந்து உதவிகளைப் பெறும் விடயத்தில் எதிர்கட்சிகளின் எதிர்ப்பை சமாளிக்கவும் ரணில் விக்ரமசிங்க ஒரு நகர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதாயின் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் தெரிவித்தாக வேண்டும். அதனுடன் உடன்படிக்கை மேற்கொள்ளாது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது சாத்தியமில்லை என்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் அனைத்திற்கும் இணங்குவது நாட்டின் இறைமைக்கு ஆபத்தானது என தேசபக்தர்களாகத் தங்களை காட்டிக் கொள்ளும் சிலரது கருத்தாகவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தவறென்று எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரேனும் எதிர்ப்புத் தெரிவித்தால், இதற்கான மாற்று வழிமுறை என்ன என்பதையும் அவர்கள் முன்வைக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். இதன்மூலம் எதிர்ப்புத் தெரிவிப்பவர்களின் வாய்கள் மௌனமாகும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# நானிலம் போற்றும் நட்பு - 5




- அகணி -
authorakani@gmail.com

திருவள்ளுவர் குறள் 785
“புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்” என்ற குறளுக்கு நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை, ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்துவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்” என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார். “நட்புக் கொள்வதற்கு நேரே பார்க்கவும் பழகவும் வேண்டும் என்பது இல்லை. ஒத்த உணர்ச்சியே நட்பு என்னும் உரிமையை உண்டாக்கும்” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார். “இருவருக்கும் ஒத்த அறிவே நட்பை உண்டாக்கும்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார். நட்புக்கு ஒத்த உணர்வு அல்லது அறிவு முக்கியம் என்பதை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது. நட்பு நிலைப்பதற்கு அவர்களிற்கிடையேயுள்ள புரிந்துணர்வு பெரும் பங்கை வகிக்கின்றது என்பது பொதுவான விடயம்.

“நமது உளவியல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, உடல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை பாதிக்கும் மிக முக்கியமான விடயம் நட்பு.” நண்பர்களுடன் நேரத்தை செலவிடுவது மூளையில் எண்டோர்பின்களை வெளியிடுகிறது, மேலும் நம்மை மகிழ்ச்சியடையச் செய்கிறது” (“Friendship is the single most important thing affecting our psychological health and wellbeing, as well as our physical health and wellbeing. Spending time with our friends releases endorphins in the brain, and makes us happy.” என்று பேராசிரியர் ரொபின் டன்பார் (Robin Dunbar) கூறியுள்ளார். அவரின் இந்தக் கூற்றுக்குப் பின்னால் நிறைந்தளவு ஆய்வுகள் இருப்பதாக ஐக்கிய இராச்சியம் உளவியல் சபை யூலை 27, 2021இல் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது. ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் நல்ல நண்பர்கள் அவனின் அல்லது அவளின் உடல் நலத்திற்குப் பெருமளவு பங்காற்றுபவர்களாக உள்ளனர்.

இளமையில் கிடைக்கும் நட்பு மிகவும் அவசியமானது. அது அவர்களின் வளர்ச்சிக்கும் பங்காற்றிப் பிற்காலத்தில் உறவாடும் திறமையையும் வழங்குகிறது என்று பேராசிரியர் ரொபின் டன்பார் கூறியுள்ளார்.




நண்பர்களுடன் பழகும் வழிமுறைகள் வயது கூடும்பொழுது மாற்றம் அடைகின்றது. சிறுவர்களுக்கு நட்பு பற்றிய புரிந்துணர்வும் வளர்ச்சி பெறுகிறது.

குழந்தைகள் மூன்று வயதிற்கும் ஏழு வயதிற்கும் இடையிலுள்ள காலத்தில் அவர்களின் மனதில் நட்பு என்பது கூடி விளையாடுவது பற்றியே உள்ளது. தம்மைப் போலவே நண்பர்களும் இருக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கும். தம்மைவிட வேறுபட்டுள்ளனர் என்று அறிகின்றபொழுது அதனால் மனவருத்தமும் கொள்வர். தாம் விரும்புவதை நண்பர்கள் செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிட்டால் அவர்கள் தமது நண்பர்கள் இல்லை என்றும் கூறிவிடுவர்.



ஆறு வயதிற்கும் பன்னிரண்டு வயதிற்கும் இடையிலுள்ள காலத்தில் தமது நண்பர்களின் எண்ணங்களையும் விளங்கிக் கொள்ளும் தன்மையும் ஏற்படுகிறது. ஆனால் உரையாடும் பொழுது அவர்களுக்கு உடனே ஏற்பட்டுவிடும் என்று கூறிவிடமுடியாது. தாங்கள் நண்பர்களுக்கு ஒரு நல்ல விடயத்தைச் செய்தால் அவர்களும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருக்கும். இந்தக் காலத்தில் பொறாமைத் தன்மையும் சில சிறுவர்கள் மனதில் முளைவிடும்.

சிறுவர்கள் பதினிரண்டு வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் இடையில் உள்ள காலத்தில் ஒருவருக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மற்றவர் உதவும் பழக்கம் ஏற்படுகிறது. மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாத விடயங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் தன்மையும் ஏற்படும்.

பதினிரண்டு வயதிற்கு மேற்பட்ட இளமைப் பருவத்தில் நண்பர்களிற்கிடையில் உணர்வு பூர்வமான நெருக்கம் ஏற்படும் காலமாக இருக்கும். இந்தக் காலத்தில் தமக்கும் நண்பர்களிற்குமிடையில் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ளவும் அவற்றிற்கு மதிப்பளிக்கும் தன்மையும் ஏற்படும்.

இளமைப் பருவத்தைத் தாண்டிய காலத்தில் நண்பர்களுக்கு ஆதரவு வழங்கும் தன்மையும் நம்பிக்கை கொள்ளும் தன்மையும் ஏற்படும்.

ஆனாலும் விதிவிலக்காக சில குழந்தைகளில் பருவ மாற்றங்கள் விரைவாக அல்லது தாமதமாக ஏற்படலாம்.

முனைவர் சுசானி டெக்கஸ் (Dr Suzanne Degges) அவர்கள் இன்றைய உளவியல் என்ற சஞ்சிகையின் மே மாதம் 28ஆம் திகதி இதழில் “நட்பு: நட்பின் அறிவியல்” (Friendology:The science of friendship) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் தலைப்பு என்னைக் கவர்ந்தது. அந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் நட்பு ஒரு தனித்துவமான உறவு என்றும் அதனையும் அதன் பரிமாணங்களையும் வரையறுப்பது மிகவும் கடினமான செயலெனக் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது முனைவர் சுசானி டெக்கஸ் அவர்கள் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள சில விடயங்களைக் கவனிப்போம்.

அவர் “இன்னொருவருடன் இணைந்து இன்பம் பெறும்போது நட்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. ஒருவருடன் இருப்பது ஒரு கடமையாக மாறும்போது, ஒரு விருப்பத்தைவிட, நட்பு குறையத் தொடங்குகிறது” என்கின்றார். இந்தக் கூற்றை ஆராயும்பொழுது ஒருவர் மனதில் ஏற்படும் இன்பம் என்ற உணர்வு இருவருக்கிடையில் ஏற்படும் நட்பினை மதிப்பிடும் கருவியாக உள்ளது. ஒருவருடன் உள்நட்பினால் மனதில் மகிழ்ச்சியான தருணங்கள் உள்ளனவா என்ற சுய ஆய்வில் ஆம் என்ற பதில் கிடைக்குமாறு நட்பு ஆரோக்கியமானதாக உள்ளதாவென இரு தரப்பும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நட்பின் கட்டமைப்பானது பரஸ்பரம் மற்றும் கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றைக் குறிக்கிறது. இது ஒரு உடனடியான சமமான பரிமாற்றப் பொருளாதார மாதிரியின் அர்த்தத்தில் இல்லை, மாறாக எந்த தரப்பினருக்கும் தேவைகள் எழும்போது ஆதரவு இரு வழிகளிலும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நட்பின் அர்ப்பணிப்பு நிலைகள் வாழ்நாள் முழுவதும் மாறுபட்டுக்கொண்டேயிருக்கும். அந்த நேரத்தில் குடும்பம் அல்லது பிற கடமைகளுக்குத் தேவைப்படும் ஆற்றலைப் பொறுத்தது. இருப்பினும், “பல பெண்கள் நெருக்கடி ஏற்படும் போது, அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் அல்லது சவால்களைப் பொருட்படுத்தாமல், உண்மையான நண்பர்கள் ஆதரவை வழங்க முடியும் என்று நம்புகின்றனர்.” என்கின்றார் முனைவர் சுசானி டெக்கஸ் அவர்கள்.

நட்பு என்ற அற்புதமான உறவைப் பேணி நல்ல நண்பர்களைக் கொண்ட மனிதன் மற்றவர்களைவிட அதிக வெற்றியை வாழ்க்கையில் பெறுகின்றான் என்பதை நாங்கள் நாளாந்தம் சமூகத்தில் காண்கின்றோம். அதற்கு நட்பினை எவ்வாறு பேணிக் கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளவும் இந்தத் தொடர் கட்டுரை பயனுள்ளதாக அமையும் என எண்ணுகின்றேன்.

முக்கியமாக, நண்பர்களிடையே பரஸ்பர மரியாதை இருந்தால் மட்டுமே உண்மையான நட்பு வளரும்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

# ஒன்ராறியோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பெற்ற ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களைத் தேடுகின்றனர். இப்பற்றாக்குறைக்கு மத்தியில் அதிகரித்து வரும் தொழிலாளரின் சம்பளம் மற்றும் உற்பத்திப் பொருட்களின் அதிகரித்த விலை பாவனையாளர்களுக்கு விற்கப்படும் பொருட்களின் விலையை அதிகரிக்கச் செய்கிறது.

இந்த நிதி மற்றும் பொருளாதார சவால்களை நாம் குறைத்து மதிப்பிடவோ அல்லது புறக்கணிக்கவோ முடியாது. இவற்றை நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டும். இவற்றிற்கு எளிதான தீர்வுகள் எதுவும் இல்லை.

வளர்ந்து வரும் பணவீக்க அழுத்தத்திற்குப் பதிலளிக்கும் விதமாக கனடிய வங்கி தனது வட்டி வீதத்தை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் ஏற்படும் விளைவு உடனடியாகத் தெரியாது. ஆனாலும், அமெரிக்கா மற்றும் கனடாவின் ஏனைய பகுதிகளைப் போல ஒன்ராறியோவும் ஒரு குறுகியகாலப் பொருளாதார மந்தநிலைக்குத் தயாராக வேண்டும்.

ஒன்ராறியோ மாகாணம், கனடா மற்றும் உலகம் ஒரு நிச்சயமற்ற காலகட்டத்திற்கு ஊடாகச் செல்கின்றபோதும் பொருளாதாரத்தின் அடிப்படைகள் குறித்து உங்கள் அரசாங்கம் உறுதியாக உள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தின் குறைந்த வரிகள், போட்டி நிறைந்த வணிகச் சூழல் (Competitive Business Environment) முதலீடுகளை ஈர்க்கின்றன. மற்றும் நல்ல வேலைகளை உருவாக்குகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் உங்களது மாகாண அரசு, மாகாணத்தின் வாகன மற்றும் உற்பத்தித் துறைகளில் புதிய முதலீடுகளைச் செய்துள்ளது. போக்குவரத்துத் திட்டங்கள் பல திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை நிர்மாணத்திற்குத் தயாராக உள்ளன. தெருக்கள், நெடுஞ்சாலைகள் (highways) மற்றும் முக்கியமான உள்கட்டமைப்புக்கள் (Critical Infrastructure) விரைவில் மக்கள் போக்குவரத்துக்கும் மற்றும் சந்தைப் பொருட்களை விநியோகம் செய்யவும் தயராகிவிடும். நாளைய பணிகளுக்குத் தேவையான பணியாட்கள் பலர் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்றப்பட்டு வருகின்றனர்.

நாம் இந்த முயற்சிகள் எல்லாவற்றையும் இரட்டிப்பாக்க வேண்டிய தருணம் இது. மக்களுக்கு வலிதரும் வரி உயர்வுகள் அல்லது அத்தியாவசியத் தேவைகளுக்கான செலவுகளைக் குறைத்தல் போன்றவற்றைச் செய்யும் நேரம் இது அல்ல. உங்கள் அரசு பொருளாதார வளர்ச்சியில் எமது மாகாணத்தை முன்னோக்கி நடத்திச் செல்லத் தயாராக உள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தைக் கட்டியெழுப்புவதற்கான (Build Ontario) அதன் இலட்சியத்தில் மாகாண அரசு மிகவும் உறுதியுடன் உள்ளது. அதைத் தொடர்ந்து செயல்படுத்தும்.

ஒன்ராறியோ மாகாணத்தைத் திறந்த நிலையில் வைத்துக்கொண்டு நோயாளிகளை சிறப்பாகப் பராமரிக்கும் சுகாதார அமைப்பை உருவாக்குவோம். கோவிட்-19 வைரஸின் திரிபுகளை எதிர்கொள்ள எம்மிடம் போதிய அளவு தடுப்பு முறைகள் உள்ளன.



உலகிலேயே கோவிட்-19 தொற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசிகளைப் போட்ட அதிகூடிய மக்களைக் கொண்ட பிரதேசங்களில் ஒன்றாக ஒன்ராறியோ மாகாணம் உள்ளது. தற்போது ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள அனைத்து வயது வந்தவர்களும் மேலதிக தடுப்பூசிகளைப் (booster doses) போடுவதற்கு வசதிகள் உள்ளன. குழந்தைகளுக்கான கோவிட்-19 தடுப்பூசிகளை அண்மையில் மத்திய சுகாதார அமைச்சு (Health Canada) அனுமதித்துள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தில் வாழும் குழந்தைகளுக்கான கோவிட்-19 தடுப்பூசிகள் பல்லாயிரக் கணக்கில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 தொற்று ஏற்பட்டதைப் பரிசோதிப்பதற்கான விரைவு பரிசோதனைக் கருவிகள் இலவசமாக ஒன்ராறியோ மக்களுக்கும், பணியிடங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள், நீண்ட காலப் பராமரிப்பு மற்றும் ஓய்வுகால வதிவிடங்களுக்கும் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

பள்ளிக்கூடங்கள், குழந்தை பராமரிப்பு மையங்கள், நீண்டகாலப் பராமரிப்பு மற்றும் ஓய்வுகால வதிவிடங்களின் பாதுகாப்பை மேம்படுத்த 145,000இற்கு மேற்பட்ட தனித்து இயங்கும் HEPA வடிகட்டிகள் (Filters) வழங்கப்பட்டுள்ளன.

மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் மற்றும் மக்களை மருத்துவமனைகளுக்குச் செல்வதைத் தவிர்க்கும் முறைகளை உலகின் விஞ்ஞான சமூகம் எவ்வளவு விரைவாகத் தொடர்ந்து உருவாக்கி வருகிறது என்பது வியப்பிற்கு உரியது.

இவற்றைப் பாவித்து உங்கள் மாகாண அரசு எமது சுகாதார வசதிகளைக் கட்டி எழுப்பவும், எமது பொருளாதார வளர்ச்சியை மாகாணத்தை முடக்கம் செய்யாமல் மேம்படுத்தவும் தொடர்ந்து முயற்சி செய்யும்.

பல தசாப்தங்களாக மாகாண அரசுகள் போதிய அளவு நிதியைச் சுகாதார சேவையில் முதலிடவில்லை. உங்களது தற்போதைய மாகாண அரசு 3,500 புதிய மருத்துவமனைப் படுக்கை வசதிகள், பல்லாயிரக்கணக்கான தாதிகள் மற்றும் தனிப்பட்ட ஆதரவுப் பணியாளர்களைப் பணியில் அமர்த்துதல் என்பவற்றில் முதலீடுகளைச் செய்துள்ளது.

உங்களது அரசாங்கம் சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற சுகாதார சேவைப் பணியாட்கள் மற்றும் நிபுணர்களுக்கு ஒன்ராறியோ மாகாணத்தில் பணியாற்றத் தடையாக இருந்த கனடியப் பணி அனுபவம் தேவை என்ற நிபந்தனையை தற்போது நீக்கியுள்ளது. இது பல புதிய சுகாதாரப் பணியாட்களை வெளிநாடுகளில் இருந்து ஒன்ராறியோவிற்கு வர வழியமைத்துக் கொடுக்கும்.

ஒன்ராறியோவின் உள்ளூர் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் சுகாதார சேவை செய்யப் பணியாட்கள் போதியளவு இல்லை. இதனால் உங்களது மாகாண அரசு இவ்வாறான தொலைதூரப்பகுதிகளில் பயிற்சி செய்யும் சுகாதாரப் பணியாட்களுக்கு அவர்களது பட்டப்படிப்பிற்கான கற்றலுக்கும், தங்குமிட வசதிக்குமான செலவுகளை மானியமாக (grant) வழங்குகிறது.

மாகாண அரசு வதிவிட மற்றும் சமூகப் பராமரிப்பை விரிவுடுத்த $1 பில்லியனை முதலிடுகிறது. இதனால் அதிகமான மக்கள் மருத்துவமனையில் இருப்பதைவிட வீட்டிலேயே தங்களுக்குத் தேவையான ஆதரவைப் பெறமுடியும்.

ஒன்ராறியோ மாகாண அரசு கடந்த ஒரு தசாப்த காலத்தில் இல்லாத அளவு அதிகளவு மாணவர்களுக்குக் குடும்ப மருத்துவ மற்றும் சிறப்பு மருத்துவ அனுமதி கிடைக்க வசதி செய்து கொடுத்துள்ளது.

ஒன்ராறியோ மாகாண வரலாற்றிலேயே இல்லாத அளவு அதிக முதலீட்டை உங்கள் அரசாங்கம் மருத்துவமனைகளைக் கட்டவும், விரிவுப்படுத்தவும் முதலிட்டுள்ளது. பல ஆண்டுகளாக மருத்துவமனை கட்டித்தருமாறு கேட்டுக்கொண்டிருந்த நகரங்களான: பிரம்ப்டன், வின்சர், ஒட்டாவா மற்றும் நயாகராவில் விரைவில் புதிய மருத்துவமனைகள் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கனடா முழுவதிலுமே மருத்துவப் பணியாட்கள் மிகுந்த பணிச்சுமையுடன் அதீத மன அழுத்தத்துடனேயே வேலை செய்து வருகின்றனர். இந்த அழுத்தத்தின் மத்தியிலும் ஒன்ராறியோ மாகாண சுகாதார அமைப்பு அவசர மருத்துவ உதவி தேவைப்படுவோருக்குத் தொடர்ந்து கவனிப்பை வழங்கி வருகிறது. மிகவும் அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளிகளில் 10 பேரில் ஒன்பது பேர் தங்களது அவசரகால தேவையைக் குறிப்பிட்ட நேரத்தில் முடித்துக் கொள்கின்றனர். அறுவை சிகிச்சைகளைப் பொறுத்தமட்டில், எமது மருத்துவமனைகள் கோவிட்-19 பெருந்தொற்று நோய்க்கு முந்தைய நிலையை 90% அடைந்துள்ளனர்.

உங்களது அரசால் இன்னும் பல விடயங்களை செய்ய முடியும். இதனால் ஒன்ராறியோவில் சுகாதார சேவை வழங்குநருடன் உங்கள் அரசாங்கம் கலந்து ஆலோசனை நடத்திவருகிறது. உடனடி அழுத்தங்களைத் தணிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாகாண அரசு செயல்படுத்தும்.

மாணவர்கள் கடந்த இரண்டு வருடமாகப் பாடசாலை சென்று கல்வி கற்கவில்லை. இதனால் ஏற்பட்ட கற்றலில் உள்ள இடைவெளியை நிரப்ப மாகாண அரசு புதிய பயிற்சி ஆதரவுகளை வழங்கும்.

இதன் முதல்கட்டமாக உங்கள் அரசாங்கம் ஒரு புதிய மாகாணம் தழுவிய பயிற்சித் திட்டத்தை $175 மில்லியன் முதலீட்டில் தொங்கியுள்ளது. ஒவ்வொரு கிழமையும் கிட்டத்தட்ட 50,000 மாணவர்கள் இந்தப் பயிற்சித் திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர்." எனக் கூறினார்.

சிம்மாசனப் பிரசங்கத்தின் பின்னர் பழமைவாதக்கட்சி மாகாண அரசு 2022 ஏப்பிரல் மாதத்தில் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தை மீண்டும் சிறிய மாற்றத்துடன் சமர்ப்பித்தது.



இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மாகாண அரசின் $200 பில்லியன் முதலீடு அடங்கியுள்ளது. இதில் ஏப்பிரல் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் கூறியிருந்ததை விட ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டத்திற்கான நிதியில் 5% மேலதிக முதலீடு இடப்பட்டுள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 2021-2022 நிதியாண்டிற்கான துண்டுவிழும் தொகை $13.5 பில்லியன் என உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 2022-2023 நிதியாண்டிற்கான துண்டுவிழும் தொகை $19.9 பில்லியனாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னர் இது $27.7 பில்லியனாக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டிருந்தது.


யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361





# தாமிரபரணி கரையில் புதைந்துள்ள தங்கம்


# மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழன் சரித்திரம்

**கண்ணன்**

தமிழ்நாட்டில் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் ஸ்ரீ வைகுண்டம் அருகே இருக்கும் இரண்டு அழகிய சிற்றூர்கள் ஆதிச்ச நல்லூர், சிவகளை. தாமிரபரணி ஆற்று நீர்ப் பாசனத்தை நம்பி விவசாயம் செய்யப்படும் கிராமங்கள். தாவரங்கள் உயிர்த்தெழுந்ததும் கானமயில்களின் உற்சாக நடனம் தவறாமல் காணக்கிடைக்கும் இந்த ஊர்களில். இப்பகுதியில் இரண்டு நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் அகழாய்வில் சமீபத்தில் கிடைத்துள்ள அரிய சான்றுகள், மிகவும் முற்கால தமிழ் நாகரிகம் இந்த இரண்டு சிற்றூர்கள்தான் என்பதை உறுதி செய்கின்றன. இந்த ஊர்களிலும் தற்போது நடைபெற்றுவரும் அகழாய்வில் தங்கத் துண்டுகள் கிடைத்துள்ளன. இது 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் தங்கத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை மீண்டும் உறுதி செய்துள்ளது.

விஞ்ஞான அணுகுமுறையுடனும் மிகுந்த கவனத்துடனும் ஆதிச்சநல்லூரிலும் சிவகளையிலும் செய்யப்பட்டுள்ள அகழாய்வில் இதுவரை 200க்கும் மேலான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் எலும்புக்கூடுகள், உடையாத நல்ல முறையில் உள்ள மட்பாண்டங்கள், பலவகையான கிண்ணங்கள், உருண்டை வடிவான பானைகள், குடுவைகள், உருளை வடிவப் பாத்திரங்கள், பெரிய ஜாடிகள், மிகுதியான அளவில் மாவரைக்கும் கல், கழுத்தணிகள், கடகம், காப்புகள், வளையல்கள், மோதிரம், மகுடங்கள் போன்றவையும் கிடைத்துள்ளன.

"இங்கு கிடைக்கும் தடயங்களை முன்வைத்து நம் முன்னோர்களின் கலாசாரத்தையும் சமூக பொருளாதாரக் கட்டமைப்பையும் அறிந்துகொள்ள வாய்ப்புகள் கிடைக்கும். தமிழ்நாடு, வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் பிறப்பிடம் என்பதும் தமிழ்நாடு தொன்மையான நாகரிகத்தினை உடைய ஒரு பிரதேசம் என்பதும் பல்வேறு வகைப்பட்ட ஆய்வுகள் மூலம் ஏற்கெனவே நிரூபணமாகியுள்ளது. என்றாலும் இப்போது ஆதிச்ச நல்லூரிலும் சிவகளையிலும் கிடைத்துள்ள தடயங்கள் கிட்டத்தட்ட கி.மு. 1000த்துக்கும் முன்னால் வரைக்கும் செல்லக்கூடும் என்று எதிர்பார்க்கிறோம். அதாவது 3000 வருடங்களுக்கு முந்தையவை. இது தமிழரின் மிகவும் முற்கால நாகரிகம் என்பதுடன் மனிதன் வாழ்ந்த உலகின் தொன்மையான இடங்களில் தமிழகமும் ஒன்று என்பதை உலகத்துக்குச் சொல்ல மீண்டும் நமக்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதுதான்




இப்போது ஆதிச்சநல்லூர், சிவகளை அகழாய்வுகளை முக்கியத்துவம் உடைய தாக்குகிறது" என்கிறார், தமிழ்நாடு தொல்லியல் துறை முன்னாள் கண்காணிப்பாளர் சத்தியமூர்த்தி.

